DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: Govindan | Father's Name: Venkatarar |
| Village: Thimmampettai | Taluk: Vaniyambadi |
| Caste: | Calling: |
| Religion: | Age: 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.01.2023.

O.S.NO. 31/2018 DW1
வாதித்தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி -

1) இதே நீதிமன்றத்தில் கோவிந்தராஜ் இதே வழக்குச் சொத்து சம்மந்தமாக என் பெயரிலும், முருகேசன் பெயரிலும் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் 26.10.2015 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் பெயரில் கோவிந்தராஜ் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ் நெ. 26/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல் முறையீட்டு வழக்கில் 08.06.2017 அன்று சொத்து கோவிந்தராஜ்க்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியவில்லை. நான் அந்த தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல் முறையீட்டு எண். 77/2019 என்ற வழக்கினை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த 2ம் மேல் முறையீடு வழக்கானது 24.01.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2) வழக்குச் சொத்தினுடைய சர்வே எண். 138/9 என்றால் சரிதான் என சாட்சி தலையாட்டினார். சாட்சியிடம் வாய்மொழியாக பதில் அளிக்குமாறு விளக்கி கேட்ட போது சாட்சி தனக்கு சர்வே எண் விவரம் தெரியாது என சொல்கிறார். வழக்குச் சொத்தின் பட்டா எண். 330 என்றால் எனக்கு அந்த விவரமும் தெரியாது. வழக்குச் சொத்திற்கு மேற்கு பக்கம் சந்து வழி உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கு வடக்கு பக்கம் சொத்தை கிருஷ்ணன் என்பவர் வைத்திருந்து தற்போது மகேஸ்வரி அச்சொத்தின் உரிமையாளர் ஆவார். வழக்குச் சொத்திற்கு கிழக்கு மற்றும் தெற்கு ஆகிய திசைகளில் தட்டப்ப முதலியார் சொத்து ஆரம்பத்தில் இருந்தது என்றால் தற்போதும் அச்சொத்துக்கள் தட்டப்ப முதலியாரிடம் தான் உள்ளது. தற்போது தட்டப்ப முதலியார் சொத்துக்களை அவரது மகன் சாமண்ணன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

3) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிவாசாஆ 12 கிரைய ஆவணமானது முருகேசனுக்கு நானும், எனது மகன் கனகராஜும் சேர்ந்து கிரையம் கொடுத்த சொத்து என்றால் சரிதான். பிவாசாஆ 12 கிரைய சொத்தானது வழக்குச் சொத்திற்கு தெற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். முருகேசன் பெயருக்கு பிவாசாஆ 12 கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த போது அச்சொத்திற்கான என் பெயரில் உள்ள மூல ஆவணம் ஏதாவது முருகேசனிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. நான் முருகேசன் பெயருக்கு பிவாசாஆ 12 கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுப்பதற்கு முன்பு அக்கிரைய சொத்திற்கு என் பெயரில் ஆவணம் ஏதாவது ஏற்பட்டிருந்ததா என்றால் பட்டா ஏற்பட்டிருந்தது. முருகேசனுக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு என் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்ததா என்றால் ஏற்பட்டிருந்தது. அந்த சொத்து எனக்கு பூர்வீக சொத்தா என்றால் ஆமாம்.

4) முருகேசனுக்கு கிரையம் கொடுத்த சொத்தின் பட்டா எண். 164 என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. பிவாசாஆ 12 கிரைய ஆவணத்தில் நான் கிரையம் கொடுத்த சொத்தின் பட்டா எண் மற்றும் சர்வே எண் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய சொத்தின் சர்வே எண். 138/10 என்றால் எனக்கு சர்வே எண் தெரியாது. பிவாசாஆ 12 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் சரியானது தானா என்றால் சரியானது தான். நான் முருகேசனுக்கு கிரையம் கொடுத்த பிவாசாஆ 12 ஆவண சொத்தில் தான் முருகேசன் இலவச வீடு கட்ட அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் முருகேசனுக்கு கிரையம் கொடுத்த சொத்து காலியிடம் என்றால் சரிதான். நான் முருகேசனுக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு முன்பு நான் அரசாங்கத்திற்கு வரி செலுத்தி வந்தேன் என்றால் சரிதான்.

5) நான் முருகேசனுக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு அரசாங்கத்திற்கு செலுத்திய வரி ரசீதின் பட்டா எண். 164 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிவாசாஆ 4 முதல் 10 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்குள் வடக்கு பக்கத்தில் ஒரு ஓட்டு வீடு உள்ளது என்றால் ஆமாம், வடக்கு பக்கம் ஓட்டு வீடும் அதனை ஒட்டி தெற்கு பக்கத்தில் மெத்தை வீடும் உள்ளது. அந்த ஓட்டு வீட்டிற்கும், மெத்தை வீட்டிற்கும் இடையில் 8 அடி அகல காலி இடம் உள்ளது என்றால் சரிதான். மெத்தை வீட்டிற்கு தெற்கே உள்ள வழக்குச் சொத்து இடம் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். ஓட்டு வீடு கட்டி எத்தனை வருடங்கள் ஆகும் என்றால் சுமார் 40 ஆண்டுகள் ஆகும், மெத்தை வீடு கட்டி எத்தனை வருடங்கள் ஆகம் என்றால் சுமார் 20 வருடங்கள் ஆகும்.

6) வழக்குச் சொத்தில் உள்ள மெத்தை வீட்டின் கதவு எண். தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் ஓட்டு வீட்டிற்கு கதவு எண். தெரியுமா என்றால் தெரியாது எனக்கு எழுதப்படிக்க தெரியாது. ஓட்டு வீட்டின் அளவு எனக்கு தெரியுமா என்றால் கிழக்கு மேற்காக சுமார் 30 அடியும் வடக்கு தெற்காக சுமார் 17 அல்லது 18 அடியும் இருக்கும். மெத்தை வீடும், அதே போல சுமார் 30 அடிக்கு 18 அடி அளவில் இருக்குமா என்றால் இருக்கும். வழக்குச் சொத்தில் உள்ளதாக சொல்லும் ஓட்டு வீடு, மறறும் மெத்தை வீடு ஆகியவற்றை கட்டுவதற்கு பஞ்சாயத்து அலுவலகத்தில் ஏதாவது அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் மேலே சொன்ன ஓட்டு வீடு மற்றும் மெத்தை வீடு இரண்டையும் கட்டியது நானா அல்லது முருகேசனா என்றால் நான் தான் கட்டினேன். முருகேசன் கட்டிய வீடு வேறு ஆகும்.

7) வழக்குச் சொத்தில் உள்ளதாக சொல்லும் ஓட்டு வீடு மற்றும் மெத்தை வீடு ஆகியவற்றின் முகவரி குறிப்பிட்டு என் பெயரில் ஏதேனும் அடையாள சான்று ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. வழக்குச் சொத்தில் உள்ளதாக சொல்லும் வீடுகள் என் பெயரில் உள்ள இடத்தில் தான் அமைந்துள்ளன என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் உள்ளது. 40 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வீடும், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வீடும் கட்டியதாக சொல்வது தவறான சாட்சியம் என்றால் சரியல்ல. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்து மேற்படி வீடுகளை கட்டி விட்டேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்குச் சொத்தில் ஆக்கிமித்து கட்டப்பட்ட வீடுகளை இடித்து சுவாதினம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8) பிவாசாஆ 15 ஆவணமான நாட்ரம்பள்ளி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கிய செயல் முறை உத்தரவு ஆவணமானது முருகேசன் என்னிடம் வழங்கியது என்றால் சரிதான். பிவாசாஆ 15 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் வீடு கட்ட அனுமதி வழங்கப்படுகிறது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நாட்ரம்பள்ளி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கிய பிவாசாஆ 15 உத்தரவின்படி தான் வழக்குச் சொத்தில் முருகேசன் வீடு கட்டினார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. வழக்குச் சொத்தில் முருகேசன் வீடு கட்டிய விவரம் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட செயல்முறை உத்தரவு பற்றி என் மகனுக்கு தான் தெரியுமா என்றால் ஆமாம். வாதிக்கு சொந்தமான சொத்தினை நான் அபகறிப்பதற்காக இந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.